**இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் (“Committee”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, ஓஒதுக்கங்கள், மற்றும் நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரககாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியின் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர சம்மேளனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (SLFRS for SMEs). உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (SLFRS for SMEs). தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய ஒலிம்பிக் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக ˙கொள்வதற்காகவேயன்றி தேசிய ஒலிம்பிக் குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக தேசிய ஒலிம்பிக் குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது தேசிய ஒலிம்பிக் குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.33 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்கோள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டிற்குரிய சுயாதீன மதிப்பீட்டாளர் மூலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போது உருப்படிகளின் நியாயமான பெறுமதி, மதிப்பீடு செய்யும் போது பயன்படுத்திய முக்கியமான எடுகோள்கள், சகல மீள்மதிப்பீட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகுப்பிற்காக கிரய முறைமையின் கீழ் இனங்காணப்பட்ட சொத்துக்களுக்குரிய முன்கொண்டு | பட்டய மதப்பீட்டாளர்களினால் 2019.12.31 இல் உள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய ஒலிம்பிக் குழு கொள்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த உருப்படியின் நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யம் போது உரித்தாகும் சகல எடுகோள்களுடன் காண்பிக்கப்பட்டுள்ளது. அப்பெறுமதிகளும் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஆதன்ங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீளமதிப்பீடு செய்து வெளிப்படுத்தப்பட வேண்டும். |

வரப்படும் பெறுமதி மற்றும் காலப்பகுதியில் வேறுபாடு காண்பிக்கப்படும் மீள் மதிப்பீட்டு மிகைக்கும் பகிர்ந்தளிப்பதற்காக வரையரைகள் காண்பிக்கும் மீதியுடன் இனங்காணப்பட்டு முன்கொண்டு வரப்படும் மீதி இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2019 திசெம்பர்31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 06 இருப்பு உருப்படி வகைகள் | 5,632,431 | இருப்பு பெறுமதியிடும் அறிக்கை | நாம் பௌதீக மெய்மையாய்வு மாத்திரம் மேற் கொண்டிருந்தோம் 2020 ஆம் ஆண்டின் போது சிக்கலைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புக்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக இருப்பு பெறுமதியிடும் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1993 இன் 29 ஆந் திகதிய 773/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | (i) தேசிய ஒலிம்பிக் குழுவினால் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கிடைக்கும் மானியங்கள் தொடர்பான அறிக்கையொன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறை விளையாட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்க வேண்டும். எனினும் 2019 ஆம் ஆண்டிற்காக | தேசிய ஒலிம்பிக் குழு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அங்கீகரிக்கப்பட் சட்டவிதிக்கோவையின் மூலமும் ஒலிம்பிக் குழுவிற்காக சுற்றுலாவில் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் எப்போதும் நிறைவேற்று உறுப்பினர்களுக்கு அவர்களின் மாதாந்த கூட்டத்தின் போது விபரிக்கப்படுகின்றது | தேசிய ஒலிம்பிக் குழுவினால் வெளிநாட்டு சுற்றுலா தொடர்பாக விரிவான அறிக்கையொன்று தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கிடைக்கும் மானியங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கை யொன்ற விளையாட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த அறிக்கையை சமர்பிக்க குழு தவறியிருந்தது. | டன் இது வழமையாக மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சு அறிக்கையிடல் தொடர்பாக உங்களால் கேட்கப்பட்ட கேள்வி உட்பட தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்பாடுகளில் அனைத்து பிரிவுகளும் மேவுகை செய்யப்படும் வகையில் வருடாந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ii) | தேசிய ஒலிம்பிக் குழுவினால் கூட்டங்களுக்காக வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்காக சமூகமளித்து மீண்டும் நாட்டுக்கு வருகை தந்து 30 நாட்களுக்குள் விரிவான அறிக்கையெயான்று விளையாட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்கு ச5கமளித்த உததியோகத்தர்கள் தேவையான அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. | தேசிய ஒலிம்பிக் குழு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அங்கீகரிக்கப்பட் சட்டவிதிக்கோவையின் மூலமும் ஒலிம்பிக் குழுவிற்காக சுற்றுலாவில் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் எப்போதும் நிறைவேற்று உறுப்பினர்களுக்கு அவர்களின் மாதாந்த கூட்டத்தின் போது விபரிக்கப்படுகின்றதுடன் இது வழமையாக மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சு அறிக்கையிடல் தொடர்பாக உங்களால் கேட்கப்பட்ட கேள்வி உட்பட தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்பாடுகளில் அனைத்து பிரிவுகளும் மேவுகை செய்யப்படும் வகையில் வருடாந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | தேசிய ஒலிம்பிக் குழுவினால் வெளிநாட்டு சுற்றுலா தொடர்பாக விரிவான அறிக்கையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,405,204 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,596,940 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,808,264 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் ரூபா 3,798,003 ஆல் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,053,978 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தன.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின உறுப்பினர்களாக 34 தேசிய சங்கங்கள் பதிவுசெய்திருந்தன. 34 தேசிய சங்கங்களில் 32 அங்கத்தவர்களுக்க 2019 ஆம் ஆண்டில் வருடாந்த மானியமாக ரூபா 6,850,000 ஆக இருந்ததுடன் 04 உறுப்பினர்களுக்காக 2019 ஆம் ஆண்டில் வேறு செயற்திட்டங்களுக்காக ரூபா 5,933,292 நிதி வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் 17 சம்மேளன உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்த ரூபா 8,630,073 தொகை உரிய சம்மேளனங்களிடமிருந்து உரிய ஆவணங்களை பெற்றுகொண்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | முன்னர் நடைபெற்ற குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடாயின் தேசிய சம்மேளனம் ஏதேனும் வேைப்பாடுகளுக்கு இணங்க ஆண்டில் அவர்களின் வருடாந்த மானியம் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான செலவினத்திற்காக வேண்டுகோள் விடப்பட வேண்டும். தேசிய சம்மேளனம் அதே வகையில் இணங்காத மானியங்கள் மற்றும் செயற்திட்ட செலவினங்கள் கோரப்பட்டால் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு நிதியத்தை விடுவிக்க முடியாமல் இருப்பதுடன் தேசிய சம்மேளனம் அத்தகைய செயற்பாட்டிற்கு பொறுப்பாகாது | உரிய ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் தேசிய ஒலிம்பிக் குழு அங்கத்தவர் சம்மேளனத்திற்கு நிதியத்தை விடுவிக்க வேண்டும். |

### 3.2 பெறுகை செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினால் 2019 ஆண்டிற்காக பெறுகை திட்டமொன்ற தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாம் 2020 ஆம் ஆண்டிற்காக அனை தயாரிப்போம் செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன ஒன்றோடொன்று சமமாக இல்லாமையால் ஒலிம்பிக் குழுவின் செயற்பாடு வருடா வருடம் வேறுபடுகின்றது. எவ்வாறாயினும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்பாடுகளுக்காக விரிவான பாதீடொன்ற தயாரிக்கப்படும். | பெறுகை திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒலிம்பிக் குழுவின் பதவியணிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்ற தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எமக்கு அதிகளவில் இலாபம் உழைக்கும் நோக்கம் இல்லாமையால் கிரயத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதற்காக குறைந்த பதவியணியினருடன் முகாமை செய்யப்படுகின்றது. ஏதேனும் புதிய செயற்பாடொன்று மீது தேவையான போது நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரத்துடன் முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பபட்டு தேவையான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது தற்போது தேசிய ஒலிம்பிக் குழுவின் தேவையொன்றாக நாம் அவதானிக்கவில்லை. இல்லாவிட்டால் எமது தேவைக்காக சுயாதீன் ஊழியர் ஒருவர் ஈடுபடுத்தப்படுவார். | செயற்திறனான மனிதள வள முறைமையை பேணிச் செல்வதற்காக பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கபட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| குழுவின்ால கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எமது தந்திரோபாய திட்டத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தந்திரோபாய திட்டமிடல் அமர்வொன்றினை நடாத்துவதற்கு 2020 பாதீட்டில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன. | குழுவின் எதிர்கால வழிகாட்டல்களினை உள்ளடக்கியதாக கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |